**11.12.2024**

**O.S.No.48/2012 மற்றும் 156/2016**

**பி.வா.சா.1 : ஆரோக்கியம்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

19) 11.02.1998 நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்து இந்த வழக்கில் உள்ளது. அந்த சொத்திலும் பாகம் கோரியுள்ளார்கள். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் சொத்தில் 1ம் பிரதிவாதி மாதேஸ்வரி மளிகை கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 136/11எ, சி, டி சொத்தில் 11டி-யில் தான் மளிகை கடை உள்ளது. கிரையம் வாங்கியதில் கிணறு பாகத்தில் 2/3 பாகம் தான் கிரையம் பெற்றுள்ளேன். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள உயிலில் முழு பாகம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. 1/3 பாகம் என்று தான் உள்ளது.

20) உயிலில் ச.எண். 136/11சி-யில் உள்ள கிணறு 1யும், பம்புசெட்டும் எஸ்.சி.172யும், டெப்பாசிட் உள்பட பூராவும் என்று தான் உள்ளது என்றால் சரியல்ல. பட்டதுறை சேர்ந்தது தான் சிவசங்காரபுர கிராமம். அப்பாவு என்ற அய்யாவு என்பவர் உள்ளார் என்றால் தெரியாது. சுப்ராயக்கவுண்டர் கவுண்டர் மகன் சுப்ராயன் என்பவரை தெரியுமா என்றால் ஊரில் உள்ளார் ஆனால் பழக்கம் இல்லை.

21) நான் தாக்கல் செய்துள்ள உயில் சாசனத்தில் எங்கள் ஊரில் உள்ள வேண்ட ப்பட்ட நபர்களை வைத்து மோசடியாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. உயில் சாசனம் எழுதுவற்கு அந்த காலத்தில்ரூ. 100 தான் முத்திரை தாள் என்றால்

எனக்கு தெரியாது. நான் எங்கள் ஊரிலேயே சார் பதிவாளர் உள்ள நிலையில் உள்ள நிலையில் சேலத்திற்கு சென்று உயில் மோசடியாக தயார் செய்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மையிலே என் பெற்றோர்கள் எனக்கு சொத்தை எழுதி வைக்க நினைத்து இருந்தால் எனக்கு சொத்தை அவர்கள் எழுதி வைத்திருப்பார்கள் என்றும், என் பெற்றோர் இறந்த பின்னிட்டு நான் மோசடியாக மேற்படி உயிலை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

22) தாவா சொத்து பொது குடும்ப சொத்து என்பதாலும், எந்த ஆவணமும் எழுதிவைகக்காமல் இறந்துவிட்டதாலும், வாதி மற்றும் என்னுடம் பிறந்தவர்களுக்கு உரிய பாகம் கொடுக்கவேண்டியது அவசியம் என்றால் சரியல்ல. நான் ஒப்படைத்துள்ள உயில் சாசனம் மோசடியாக ஆள்மாறாட்டம் செய்து முத்துசாமி கையெழுத்தையும், அலமேலு அம்மாளின் கைரேகையும் தயாரித்து அதன் அடிப்படையில் தயார் செய்த உயிலின் அடிப்படையில் உரிமை கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

23) செங்கோட கவுண்டரை சாட்சியாக இந்த வழக்கில் நான் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அவரை பற்றி எனக்கு தெரியாது. 14.07.1986 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் நான், என் தம்பி அழகுவேல் மற்றும் என் அப்பா ஆகியோர்கள் சேர்ந்து தான் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரதில் உள்ள கையெழுத்து தான் என் அப்பாவின் உண்மையான கையெழுத்து

என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து தான் உண்மையான கையெழுத்து. என் அப்பா முத்துசாமி என்று தான் கையெழுத்து போடுவார். முத்துசாமிமூப்பனார் என்று போடமாட்டார். சி. முத்துசாமி என்று உயிலில் கையொப்பம் இட்டு இருப்பது என் அப்பாவின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல.

24) 11.02.1998 கிரைய பத்திரம் கூட்டு குடும்ப சொத்தில் இருந்தும், வாதி, பிரதிவாதி கொடுத்த தொகையில் இருந்து பொதுவில் பெறப்பட்ட குடும்பத்தின் ஒரே ஆண் மகன் என்ற முறையில், கர்த்தா என்ற முறையில் என் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு முழு உரிமையில்லை என்றும், தாவா சொத்தில் எனக்கு முழு உரிமை உள்ளது என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், சரண்யா தாக்கல் செய்துள்ள வழக்கை பாக பிரிவினை பரிகாரம் படி தீர்ப்பு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனவே என் வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**